# வாக்குமூலம்
# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்
# வழக்கு எண்: CC – 93 /2019

**வழக்கு சாட்சி :PW3(LW4)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிகண்டன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | பூசை | தொழில் | : | ICICI Bank , துணை மேலாளர். |
| கிராமம் | : | பெரியகுரும்பப்பட்டி | சமயம் | : | |
| தாலுக்கா | | | வயது | : | 31 |

எதிரி ஆஜர்.

Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on the day 18th day of July 2025.

சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார் – (சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது பெரிய குரும்பப்பட்டியில் ICICI Bank ல் துணை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 24.06.2018 ம் தேதி அதிகாலை 02.30 மணியளவில் இயற்கை உபாதை கழிபபதற்காக வீட்டை விட்டு வெளியே வந்த போது என் வீட்டில் பக்கத்திலேயே அய்யனார் கோவில் உள்ளது . அந்த கோவிலில் இருந்து டம், டம் என்று சத்தம் வந்தது. எனது ஊரில் உள்ள மணிசேகர் என்பவருக்கு போன் செய்து கோவிலில் இருநது சத்தம் வருகிறது என்று சொன்னேன். பிறகு அவர் கோவில் பூசாரி கருப்பையா என்பவருக்கு போன் செய்து தகவல் சொன்னார். நாங்கள் அனைவரும் கோவிலுக்கு சென்றோம். அப்போது ஆஜா எதிரி கோவில் காம்பவுண்ட் சுவரை தாண்டிக் குதித்ததில் கீழே இருந்த அரளை கல்லில் விழுந்து அவருக்கு தலையில் காயம் ஏற்படடு இரத்தம் வந்து கொண்டிருந்தது. பின்னர் அவரை பிடித்து நானும், வையாபுரியும் விசாரித்த போது நான் அன்னவாசல் மேட்டுத் தெரு, சண்முகராஜ் என்று சொன்னார். கோவிலுக்கு உள்ளே சென்று பார்த்த போது கோவிலில் உள்ள உண்டியல் உடைக்கப்பட்டு இருந்தது.

2. அவரது வேஸ்டியில் உண்டியல் உடைக்கப்பட்ட பணத்தை வைத்திருந்தார். அதில் சில்லரை காசுகள் இருநதது . எதில் வந்தீர்கள் என்று கேட்ட போது இரு சக்கர வாகனத்தில் வந்தேன் என்று சொன்னார். பிறகு அவரையும், அவரது இரு சக்கர வாகனத்தையும், பணத்தையும் காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம். பிறகு அவர் தானாக முனவந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அதில் என் முன்னிலையிலும் , வையாபுரி என்பவர் முனனிலையிலும போலிசார் பதிவு செய்தார்.

என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான் . **அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தண்ணி அடிப்பதற்காக பணமில்லை என்று கோவில் உண்டியலை உடைத்ததாக சொன்னார் . போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>**எ.த.கு.வி**</u>

1. சம்பவம் தொடர்பாக காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு தகவல் சொல்லி போலிசார் சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் நாங்கள் சம்பவம் நடந்தவுடனேயே 2.30 மணிக்கு தகவல் சொல்லி 10 நிமிடத்தில் போலிசார் வந்தனர். போலிசாருக்கு யார் தகவல் சொன்னார்கள் என்றால் மணிசேகர், கருப்பையா ஆகியோர்கள் தகவல் சொன்னார். இலுப்பூரில் இருந்து பெரியகுரும்பபப்பட்டிக்கு செல்லும் போது ரோட்டு ஓரங்களில் நிறைய கோவில்கள் உள்ளது என்றால் இரண்டு கோவில்கள் உள்ளது. நிறைய கோவில்கள் உள்ளது என்றாலும், வழக்கிற்காக கோவில்கள் இல்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. முதல் விசாரணையில் போலிசார் ஆஜர் எதிரியிடம் விசாரணை செய்த போது மது குடிப்பதற்காக பணம் பத்தவில்லை, அதனால் கோவிலில் பணம் எடுக்க வந்தேன் என்ற விவரத்தை போலிசாரிடம் கூறி ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டு என்னிடம் போலிசார் கையெழுத்து பெறப்பட்டதாக சொல்லக்கூடிய நேரம் காவல் துறைக்கு அதிகாலை 3.00, 3.30 மணியளவில் என்னிடம் கையெழுத்து வாங்கியிருப்பார்கள் என்றால் சரிதான்.

2. நான் கையெழுத்து செய்த சமயத்தில் தான் எங்கள் கிராமத்தை சேர்ந்த கோவில் பூசாரி கருப்பையா, வேலு மகன் வையாபுரி, பாலமுத்து மகன் விஜயகுமார் , வேலு மகன் பழனிச்சாமி ஆகியோர்களிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். நான் எழுதப்படாத வெள்ளைப் பேப்பரில் கையெழுத்து செய்தேன் என்றால் இல்லை, நடந்தது குறிதது கைப்பட எழுதிய பேப்பரில் தான் கையெழுத்து செய்தேன். என்னிடம் கையொப்பம் வாங்கிய பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும், இன்று தான் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றாலும் சரிதான். கோவிலின் அருகே நின்ற இரு சக்கர வாகனம் எங்கே நின்றது , அந்த வாகனத்தை யார், யார் , எப்படி அதனை காவல் நிலையத்திற்கு எடுத்து சென்றார்கள் என்ற விவரம் அ.சா. 2 மணிசேகர் என்பவருக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான்.

3. மு தல் விசாரணையில் சொல்லியுள்ளபடி எந்த சம்பவமும நடைபெறவில்லை என்றாலும், அ.சா. 1 எனது ஊர்க்காரர் என்பதாலும், கோவில் பூசாரி என்பதாலும், அவர் கேட்டுக கொண்டதற்கிணங்க சம்பவம் நடந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் எனாறல் சரியல்ல. என் முன்னிலையில் ஆஜர் எதிரி எந்த வித ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், சொன்ன தேதியில், போலிசார் என்னை விசாரிக்கவில்லலை என்றாலும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கையெழுத்து செய்ததாக சொல்லப்படும பேப்பரில் எந்தவித அடித்தல் திருத்தல் கிடையாது என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்ததாக சொல்லப்படும பேப்பரில் Empty page என சிகப்பு மையால் குறிபிட்டு கோடிடப்பட்ட தாளில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்ததாக சொல்லப்படும் பேப்பரில் வழக்கு சம்பவம் குறித்து எதுவும் எழுதவில்லை என்றால் சரிதான். போலிசார் என் முன்னிலையில் எந்த விதமான ஒப்புதல் வாக்குமூலமும்

பெறவில்லை என்றாலும், ஊர் முககியஸ்தர்களும், போலிசாரும் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.